## பத்தாம் வகுப்பு அறிவியல் பாடப்பகுதியில் உள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக. வினா-விடை தொகுப்பு

1.கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ.விசை = நிறை × முடுக்கம் எனில் உந்தம் = ________________. விடை: **அ. நிறை × திசைவேகம்**

ஆ.இராக்கெட்டில் திரவஹைட்ரஜன் எனில்,MRI படம்பிடித்தலில்________பயன்படுகிறது. விடை :**ஆ. திரவ ஹீலியம்.**

2.இடஞ்சுழித் திருப்புத்திறனை_______குறியிலும், வலஞ்சுழித் திருப்புத்திறனை________குறியிலும்குறிப்பிடுவது மரபு.

விடை : **நேர், எதிர்**

3.கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) மின்னழுத்த வேறுபாடு : வோல்ட் மீட்டர் எனில் மின்னோட்டம் ___________. விடை : **அ. அம்மீட்டர்**

ஆ) நீர்மின் நிலையம் : மரபுசார் ஆற்றல், எனில் சூரிய ஆற்றல் :_____________. விடை : **ஆ. மரபுசாரா ஆற்றல்**

4.மின் உருகு இழை --------------------- உலோகக் கலவையால் ஆன கம்பி ஆகும். இஃது அதிகமின்தடையையும் --------------------- உருகு நிலையையும் கொண்டது.

விடை : **37% காரீயம் மற்றும் 63% வெள்ளீயம் ; குறைந்த**

5.கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) மோட்டார்:- நிலைக்காந்தம், வாணிக முறையிலான மோட்டார் _________ விடை : **மின்காந்தம்**

ஆ) குவியத் தொலைவு:- மீட்டர், திறன் ______________ விடை : **டையாப்டர்**

6.போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்குகளில் ___________ நிறவிளக்குப் பயன்படுத்தப்படுவதன் காரணம் அதன் ___________ அலை நீளம். (குறிப்பு: ஒளியின் சிதறல் அளவானது அலைநீளத்தின் நான்மடிக்கு எதிர்தகவுடையது)

விடை : **சிவப்பு, அதிகமான**

7.கீழுள்ளவற்றைக் குறிக்கும் கண்ணின் பாகங்களை எழுதுக.

அ) கண் பாவையைக் கட்டுப்படுத்தும் இருண்ட தசைப் படலம் ____________ விடை : **ஐரிஸ்,**

ஆ) கண்ணில் பொருளின் பிம்பம் உண்டாகும் பரப்பு ____________ விடை : **விழித்திரை**

www.Kanchikalvi.com

8.கோடிட்ட இடத்தை நிரப்புக:

அ) விலங்கினங்கள் சுவசாசித்தலின் போது ____________ வெளியிடப்படுகிறது.

ஆ) சூரிய ஒளியின் முன்னிலையில் தாவரங்களால் தயாரிக்கப்படும் பொருள் _____________ ஆகும்.

விடை : **அ. கார்பன் - டை - ஆக்ஸைடு ஆ. ஸ்டார்ச்**

9.மனிதனின் சுவாசக்காற்றானது __________வழியாக ____________ க்குள் செல்கிறது. மீன்களில் நீரானது _________வழியாக உடலுக்குள் சென்று, நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜன் ___________க்குள் பரவுகிறது.

விடை : **நாசித்துளை, நுரையீரலுக்குள், வாய், செவுள்களில் உள்ள இரத்தக் குழாய்களுக்குள் பரவுகிறது.**

10.காற்றில்லாச் சுவாசித்தலில் --------- என்பது 6 கார்பன் கொண்ட சேர்மம், லாக்டிக் அமிலம் என்பது______கரிமச் சேர்மம்.

விடை : **குளுக்கோஸ் , 3 கார்பன்**

11.கூட்டுக்கனி ____________ ன் அனைத்து மலர்களிலிருந்தும் உருவாகிறது.__________ கனியானது ஒரு மலரின் இணையாத பலசூலக இலைகளைக் கொண்ட மேல்மட்டச் சூற்பையிலிருந்து உருவாகிறது.

விடை : **மஞ்சரி ; திரள்**

12.இரம்யாவுக்கு ஈறுகளில் இரத்தம் கசிதல், பல் ஆடுதல் முதலிய நோய்கள் உள்ளன. ஆய்ந்தறிந்ததில் இவை வைட்டமின் குறைபாடு என்று கண்டறியப்பட்டது.

இரம்யாவின் உணவு பழக்கத்தில் பற்றாக்குறையுள்ள வைட்டமின்______. இக்குறைபாட்டு நோய்க்கான பெயர்______.

விடை : **வைட்டமின் 'C' , ஸ்கர்வி**

13.சாதாரண சளியால் பாதிக்கப்பட்ட நபரிடம் காணப்படும் பொதுவான அறிகுறிகள் யாவை? i) _________. ii) ________.

விடை :

(i) **மூக்கிலிருந்து நீர், சளி வருதல்.** ii) **தலைவலி மற்றும் காய்ச்சல்**

(iii) **சுவாசப் பாதை, அதன் மேற்புறங்களிலுள்ள நாசி எபித்தீலியத் திசுக்களின் வீக்கம்.**

14.பாரம்பரியம் சார்ந்த சில முக்கியச் சொற்குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் உரியனவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (அல்லீல், மாறுபாடுகள், சிற்றினமாதல், ஜீன், அல்லீலோ மார்ஃபுகள்)

i) _______________ காரணிகள் இயற்பியல் சார்ந்த பாரம்பரியக்காரணிகள் ஆகும்.

ii) _______________ என்பது ஒரே ஜீனின் மாற்றுத் தன்மையாகும்.

iii) _______________ என்பது அல்லீல்களுடைய எதிர்ப்பண்பமைப்பு ஆகும்.

விடை : **i) ஜீன் ii) அல்லீல் iii) அல்லீலோ மார்ஃபுகள்.**

15. கடத்தக் கூடிய பண்புகள் தம் சிற்றினத்திற்குள்ளும், பேரினத்திற்குள்ளும் மாறுபடும். கீழ்க்காணும் பண்புகள் எத்தகைய மாறுபாடுகள் கொண்டுள்ளன எனக் குறிப்பிடுக.

i) மனிதக் கண்ணின் நிறம் நீலம், கறுப்பு, பழுப்பு, பச்சை என மாறுபடுகிறது. இவ்வகை மாறுபாடு_____________எனப்படும்.

ii) முயல், யானை போன்றவற்றில் காணப்படும் பல் அமைப்பு மாறுபட்டுள்ளது. இவ்வகை மாறுபாடுகள் _____எனப்படும்.

விடை :

**i) சிற்றின உயிரிகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடு.**

**ii) பேரினத்துக்குள்ளே காணப்படும் வேறுபாடு.**

16. ஒற்றுமையின் அடிப்படையில் கண்டறிக. திமிங்கலம் : துடுப்புகள் : வௌவால் :__________ விடை : **இறக்கைகள்.**

17. கோடிட்டவற்றை நிரப்புக. இரத்தச் சிவப்பணு : ஆக்ஸிஜனை எடுத்துச் செல்கிறது. இரத்த வெள்ளையணு : ________.
விடை : **நோய்க்கிருமிகள் தாக்குதலில் இருந்து உடலைப் பாதுகாக்கிறது.**

18.மாறுபாடு அடைந்ததன் அடிப்படையில், ஒருங்கிணைத்து எழுதுக.
வெட்டும் பற்கள் ; யானையின் தந்தம் _________________ , முள்ளம்பன்றியின் முட்கள்

**விடை : புற அடுக்கு ரோமங்கள்**

19.கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.

| அடினோஹைபோபைசிஸ் ஹார்மோன் | செயல்கள் மற்றும் கோளாறுகள் |
|---|---|
| சொமட்டோட்ரோபிக் ஹார்மோன் / வளர்ச்சி ஹார்மோன் ( STH / GH ) | |
| | தைராய்டு சுரப்பியின் வளர்ச்சியைத் தூண்டி தைராக்ஸின் உற்பத்தியைத் தூண்டும். |

www.Kanchikalvi.com

விடை :

| அடினோஹைபோபைசிஸ் ஹார்மோன் | செயல்கள் மற்றும் கோளாறுகள் |
|---|---|
| சொமட்டோட்ரோபிக் ஹார்மோன் / வளர்ச்சி ஹார்மோன் ( STH / GH ) | **சிறியவர்களில் குறைவான சுரப்பு குள்ளத்தன்மை, மிகைசுரப்பு அசுரத்தன்மை / பெரியவர்களில் மிகை சுரப்பு - அக்ரோமெகலி** |
| **தைரோட்ரோபிக் / தைராய்டு தூண்டும் ஹார்மோன் (TSH)** | தைராய்டு சுரப்பியின் வளர்ச்சியைத் தூண்டி தைராக்ஸின் உற்பத்தியைத் தூண்டும். |

20.பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| தனிமம் | அணுநிறை | மூலக்கூறு நிறை | அணுக்கட்டு எண் |
|---|---|---|---|
| குளோரின் | 35.5 | 71 | |
| ஓசோன் | | 48 | 3 |
| சல்பர் | 32 | | 8 |

விடை : **2, 16, 256**

21.கால்சியம் ஆக்சைடின் வாய்ப்பாடு CaO. கால்சியத்தின் அணுநிறை 40.ஆக்ஸிஜனின் அணுநிறை 16 மற்றும் கார்பனின் அணு நிறை 12.

அ.ஒரு மோல் Ca (____கி) மற்றும் ஒரு மோல் ஆக்ஸிஜன் அணு (____கி) இணைந்து _____மோல் CaO (____கி) தருகிறது.

ஆ.ஒரு மோல் Ca(--------கி) மற்றும் ஒரு மோல் C (--------கி) மற்றும் 3 மோல்கள் ஆக்ஸிஜன் அணு (--------கி) இணைந்து ஒரு மோல் $CaCO_3$ (-----------------------கி) உருவாகிறது.

விடை: **அ. 40கி, 16கி, 1மோல், 56கி. ஆ. 40கி, 12கி, 48கி, 100கி**

ஆக்கம் : மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர். இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம். மீனா.மேகநாதன் M.Sc.,M.Phil.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம். அலைபேசி - 9095484620.